# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 26 செவ்வாய்க்கிழமை (08-06-1993) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 192


# சாயிபாபாவைக் கொல்ல முயற்சித்த 4 சந்தேக நபர்கள் சுட்டுக் கொலை!



சத்திய சாயி பாபா

## இரு பக்தர்களும் பலியாகினர்; புட்டபர்த்தியில் சம்பவம்

புதுடில்லி, ஜூன் 8

குத்துவாள்கள் சகிதம் சென்ற நான்கு இளைஞர்கள் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவைக் கொல்ல எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது. எனினும் பாபாவின் இரு பக்தர்களை அவர்கள் குத்திக் கொன்றனர். அந்த இளைஞர்கள் நால்வரும் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆந்திர மாநிலத்தில் உள்ள பகவானின் புட்டபர்த்தி நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

புட்டபர்த்தியில் பகவானைச் சந்திக்கச் சென்ற மேற்படி நால்வரும் அதற்கு அனுமதி கிடைக்காததால் பகவானின் பாதுகாவலர்களையும் கூடியிருந்த பக்தர்களையும் கத்தியால் தாக்கியதாக பி.பி.ஸி. அறிவித்தது.

உடனடியாக பகவானின் பாதுகாவலர்கள் அந்த நால்வரையும் அந்த இடத்திலேயே சுட்டு வீழ்த்தினர் என்றும்—

இக்கலவரத்தில் இரண்டு பக்தர்கள் உயிரிழந்தனர் என்றும்—

பகவான் சத்திய சாயி பாபாவுக்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்படவில்லை என்றும் பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது.

ஆனால் வெரித்தாஸ் தனது செய்தியில் —

பகவானைச் சந்திக்க கைகளில் கத்தியுடன் வந்த நால்வர் அவரைக் கொலை செய்ய முயற்சித்தார்கள் என்றும் —

( 6 ஆம் பக்கம் பார்க்க)

# தற்கொலைத் தாக்குதல்கள் நடத்த மற்றொரு புலிகள் அணி கொழும்பில்

## பொலீஸார் சந்தேகம்

கொழும்பு, ஜூன் 8

தற்கொலைத் தாக்குதல்களை நடத்துவதற்காக புதிய தாக்குதல் அணி ஒன்றை விடுதலைப் புலிகள் கொழும்புக்கு அனுப்பியிருக்கின்றனர்.

பொலீஸார் இவ்வாறு சந்தேகிப்பதாக பொலீஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று அண்மையில் செய்தி வெளியிட்டிருக்கிறது.

முன்னர் கொழும்புக்கு அனுப்பப்பட்ட தற்கொலைத் தாக்குதல் அணிகளின் நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் பொலீஸாருக்குக் கிடைத்திருப்பதை உணர்ந்து கொண்டதாலேயே, புதிய அணியைப் புலிகள் கொழும்புக்கு அனுப்பியிருக்கலாம் என பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

வடக்கு—கிழக்கிலிருந்து அண்மையில் கொழும்புக்கு வந்து, தற்காலிக தரிப்பிடங்களில் தங்கி நின்ற சுமார் எழுநூறு தமிழ் இளைஞர்களைப் பொலீஸார் கைது செய்திருப்பதாகவும் —

( 6 ஆம் பக்கம் பார்க்க)

பூநகரிப் பாதை விவகாரம்:

## ஐ.நா. தூதரக அதிகாரி இன்று யாழ். வருவார்

யாழ்ப்பாணம், ஜூன் 8

பூநகரிப் பாதை திறப்பது தொடர்பான பூர்வாங்கப் பேச்சுக்களை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் நடத்துவதற்காக, அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் கொழும்பு அதிகாரி கலாநிதி பீற்றர் நிக்கலெஸ் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

நேற்று பலாலிக்கு வந்து சேர்ந்த அவர், இன்று காலை "குமாரி" கப்பல் மூலமாக பருத்தித்துறைக்கு வந்து சேருவார். இன்று மாலை விடுதலைப் புலிகளுடன் அவர் பேசுவார்.

நாளை மறுதினம் வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அவர், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-த)

கடந்த இரண்டு மாதங்களின் பின்

## 700 தபால் பொதிகள் நேற்று வந்து சேர்ந்தன

### நாளை முதல் விநியோகம்

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த "குமாரி" கப்பல் மூலம் 700 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் முற்பகுதிக்குப் பின்னர் இப்போதுதான் தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டிருக்கின்றன.

தபாலக ஊழியர்கள் இன்று காலை பருத்தித்துறையில் இருந்து தபால் பொதிகளை யாழ்ப்பாணம் எடுத்து வருவர் என்றும் —

நாளை முதல் தபால்கள் விநியோகிக்கப்படும் என்றும்—

வடமாகாண அஞ்சல் திணைக்கள சிரேஷ்ட நிர்வாகச் செயலாளர் திரு. எஸ். சடாட்சரநாதன் தெரிவித்தார். (உ-3-17-87-162)

## உணவு, தார் பரல்களுடன் "குமாரி" வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 8

மூவாயிரத்து 200 மெற்றிக் தொன் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'குமாரி' கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறையை வந்தடைந்தது.

பொருள்கள் இறக்கும் வேலைகள் நேற்றே ஆரம்பமாகின.

யாழ். செயலகம், வர்த்தகத் திணைக்களம், ப. நோ. கூ. சங்கங்கள் ஆகியவற்றுக்கான பொருள்களும்—

யாழ் போதனா வைத்திய சாலைக்கு மருந்து வகைகளும்—

வீதி திருத்த வேலைகளுக்கு 225 தார் பரல்களும் மற்றும் பல பொருள்களும் [illegible]லில் எடுத்து வரப்பட்டுள்ளன. (உ-3-87)

## வெளிநாட்டு சமாதானக்குழு நேற்று பலாலி வந்தடைந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 8

வெளிநாடுகளைச் சேர்ந்த மத குருமார், புத்திஜீவிகள் அடங்கிய சமாதான தூதுக் குழுவினர் கொழும்பிலிருந்து நேற்றுப் பலாலி வந்தடைந்துள்ளனர். அவர்கள் 'குமாரி' கப்பல் மூலம் இன்று காலை பருத்தித்துறைக்கு வருவர். அங்கிருந்து நண்பகல் சுமார் 11 மணியளவில் யாழ்ப்பாண நகரை வந்தடைவர் என எதிர்பார்க்கப் படுகிறது.

பலாலி வந்து சேர்ந்துள்ள சமாதானத் தூதுக்குழுவில் தாய்லாந்தைச் சேர்ந்த பௌத்த குருவான வண. சோமாகே குனாக்கிற்றோ தேரர் (தாய்லாந்து சூலாலங்கார பல்கலைக் கழக மானிடவியல், கலாசாரத்துறைப் பீடாதிபதி, பிலிப்பீன்ஸைச் சேர்ந்த ஆயர் மேதகு குவான்டி பியுபிளோஸ், மலேசிய ஆயர் மேதகு அன்ரன் செல்வநாயகம், செல்வி கத்தரின் ஸ்பவேர்ஸ் (பிரிட்டனில் [illegible]) ஆகியோர் அடங்குவர்.

முன்னர் அறிவிக்கப்பட்டவர்களில் வட இந்தியாவைச் சேர்ந்த பேராசிரியர் அஸ்கர் அலி எஞ்சினியர், பிலிப்பீன்ஸ் கிறிஸ்தவ மதகுரு வண. இரசியோ கோர்ட்ஸ்கியேர் ஆகிய இருவரும் வரவில்லை.

வெளிநாடுகளைச் சேர்ந்த மதகுருமார், புத்திஜீவிகளுடன் கொழும்பில் இயங்கும் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் (SEDEC) பிரதிநிதியான திரு. ஜோ. வில்லியம்ஸ்சும் வந்துள்ளார்.

வெளிநாட்டு சமாதானக் குழுவினர் மேற்கூறிய "செடாக்" அமைப்பின் அனுசரணையுடனேயே இலங்கை வந்துள்ளதாக அறிவிக்கப்படு

[2 ஆம் பக்கம் பார்க்க]

## சமாதானக் குழுக்கள் மேலும் பல யாழ். வருமாம்

கொழும்பு, ஜூன் 8

சமாதான முயற்சியின் பொருட்டு மேலும் பல மதக் குழுக்கள் யாழ்ப்பாணம் செல்லக்கூடும் என எதிர்பார்க்கப் படுகிறது — என்று பி. பி. ஸி யின் கொழும்புச் செய்தியாளர் ஊகம் தெரிவித்துள்ளார்.

எனினும் இதுவரை அங்கு சென்ற குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட அமைதிக்கான முயற்சிகளால் பலன் எதுவும் ஏற்படவில்லை என்றும் அவர் தமது கண்ணோட்டத்தில் அதிருப்தியும் கவலையும் தெரிவித்திருக்கிறார்.

அவர் தமது கண்ணோட்டத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

"செடாக்" என்றழைக்கப்படும் கத்தோலிக்க அமைப்பின் அனுசரணையுடனேயே புதிய சமாதானக் குழு யாழ்ப்பாணம் சென்றுள்ளது. போராளிகள் வசமுள்ள வடக்குப் பகுதியிலும் மற்றப் பகுதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10,000 அடையாள அட்டைகள் குமாரியில் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 8

ஆட்பதிவுத் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட 10 ஆயிரம் அடையாள அட்டைகளும் நேற்று பருத்தித் துறைக்கு வந்து சேர்ந்த "குமாரி" கப்பலில் எடுத்து வரப்பட்டிருப்பதாக அறிய வருகிறது.

யாழ். மாவட்ட ஒய்வூதியர்களின் மே, ஜூன் மாதங்களுக்கான பென்சன் வவுச்சர்களும் இக் கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

அவை இன்று கப்பலில் இருந்து இறக்கப்பட்டு, யாழ். செயலகத்துக்கு எடுத்துவரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-5]

# கிழக்கில் ஊர்காவலரின் எண்ணிக்கை அதிகரிக்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 8

கிழக்கு மாகாணத்தின் எல்லைப் பிரதேச பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக கூடுதலான ஊர்காவல் படையினர் சேவையில் சேர்க்கப்படவிருப்பதாக கொழும்பு நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்சமயம் கடமையாற்றும் 16 ஆயிரத்து 700 ஊர்காவல் படையினருக்கு புறம்பாக மேலும் ஊர்காவல்படையினர் சேர்க்கப்படவிருக்கின்றனர்.

## படையினர் சூடு

யாழ்ப்பாணம், ஜூன் 8

பூநகரி - கல்முனை இராணுவ முகாமில் இருந்து படையினர் நேற்றுக் காலை 7 மணியளவில் அரியாலைப் பகுதி நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால் அப்பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் தொழிலைக் கைவிட்டு திரும்பினர்.

அதேவேளை —

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் வல்வெட்டித்துறை கடற்பகுதியில் ரோந்து சென்ற படையினர் கரையோரப் பகுதியை நோக்கி வேட்டுக்களை தீர்த்தனர். [உ-3-30-87]

## வெளிநாட்டு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது. "செடாக்" அமைப்பு இலங்கை கத்தோலிக்க நிலையத்தின் சமாதான, மானிட மேம்பாட்டு அலுவல்களுக்குப் பொறுப்பாக உள்ளது.

### இன்றைய நிகழ்ச்சிகள்

பருத்தித்துறையில் இருந்து யாழ். நகர் வரும் வழியில் சமாதானத் தூதுக்குழுவினர் வடமராட்சி மற்றும் அச்சுவேலிப் பகுதிகளில் சேதமடைந்த இடங்களில் சிலவற்றையும் பார்வையிடுவர்.

இன்று காலை 11 மணிக்கு யாழ். நகர் வந்து சேரும் தூதுக்குழுவினர் யாழ். ஆயர் அதி மேதகு தோமஸ் சௌந்தரநாயகத்தை சந்தித்துக் கலந்துரையாடுவர்.

பிற்பகல் 1.30 மணிக்கு தூதுக்குழுவினர் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளையும்—

பிற்பகல் 3.30 மணிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளையும் சந்திப்பர்.

பிற்பகல் 5 மணிக்கு யாழ். நகரப் பகுதியில் விமானக் குண்டு வீச்சால் சேதமடைந்த சில பகுதிகளை அவர்கள் பார்வையிடுவார்கள்.

நாளை மறுதினம் வரை இங்கு தங்கியிருக்கும் இவர்கள் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை நடத்துவர். (அ-3-6)

<u>முதன் முறையாக</u>

# இசை, நடனத் துறைகளில் பட்டதாரி வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் முதல் முறையாக இசை, நாட்டியம் ஆகிய துறைகளில் பட்டதாரிவகுப்புக்களை ஆரம்பிக்க உள்ளது. இந்த வகுப்புக்களைத் தொடங்குவதற்காகத் தகுதி உடைய மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் பயிற்றுவிக்கப்பட இருக்கும் இசைமாணி (B. Music), நாட்டிய மாணி (B Dancc) ஆகிய போதனைகளுக்கு— க. பொ. த. உயர்தரத்தில் சங்கீதம் அல்லது நடனம் அல்லது இரண்டு பாடங்களும் உட்பட ஒரே முறையில் நான்கு பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

கர்நாடக இசை (வாய்ப்பாட்டு), பண்ணிசை, பரத நாட்டியம், வாத்தியங்கள்—வயலின், வீணை, மிருதங்கம் ஆகிய கற்கை நெறிகள் போதிக்கப்படும்.

இப்பட்டதாரி வகுப்புகளில் சேர விரும்புவோர் இம்மாதம் 30 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பாக். ஜனாதிபதிக்கு எதிராக குற்ற விசாரணை பிரேரணை

இஸ்லாமாபாத் ஜூன் 8

பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஷாக் கானுக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றை கொண்டுவர பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் அமைச்சரவை முடிவு செய்திருக்கிறது.

நவாஸ் ஷெரீப் அரசை பதவி நீக்கம் செய்ய ஜனாதிபதி குலாம் இஷாக்கான் தவறான வழியிலும், விதிகளுக்கு முரணாகவும் செயற்பட்டதாக அமைச்சரவை குற்றம் சுமத்தியுள்ளது.

ஜனாதிபதியை பதவி விலகும்படி முதலில் கோருவது என்றும் —

அதற்கு அவர் இணங்காவிடில் நாடாளுமன்றில் அவருக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டு வருவது என்று அமைச்சரவை முடிவு செய்ததாக அறிவிக்கப்படுகிறது (உ-6)


## 4 ஆம் ஆண்டு பிறந்தநாள் வாழ்த்து

## குகதாசன் கணேஷானந்தா

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த குகதாசன் கணேஷானந்தா இன்று (08 - 06 - 93) தமது நாலாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

இவரை அக்கா, அப்பப்பா, அப்பம்மா, ரூபி அத்தை, பெரிய அத்தை, மச்சான், மச்சாள், ஜேர்மனியில் இருக்கும் பெரியப்பா, கனடாவில் இருக்கும் சித்தப்பாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், நண்பன் சந்திரதேவா குடும்பம், தாத்தா ஆகியோர் கணேசன் அருள் பெற்று பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

இங்ஙனம்
அ. ஆறுமுகம்

(26026)

உ

வண்ணார்பண்ணை காட்டுத்துறை
அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண
விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில்

## மஹோற்சவம்

| | | |
|---|---|---|
| 10 - 06 - 93 | வியாழக்கிழமை | கொடியேற்றம் பகல் 11-00 மணி |
| 14 - 06 - 93 | திங்கட்கிழமை | தண்டிகைத் திருவிழா மாலை 6-00 மணி |
| 17 - 06 - 93 | வியாழக்கிழமை | சப்பரத் திருவிழா மாலை 6 00 மணி |
| 18 - 06 - 93 | வெள்ளிக்கிழமை | தேர் உற்சவம் காலை 10-00 மணி |
| 19 - 06 - 93 | சனிக்கிழமை | தீர்த்தோற்சவம் காலை 10-00 மணி |
| 20 - 06 - 93 | ஞாயிற்றுக்கிழமை | சண்டேஸ்வரர் உற்சவம் மாலை 4-30 மணி |

மஹோற்சவ காலங்களில் தினமும் மாலை 7-30- 8-30 வரை கந்தபுராண தொடர் விரிவுரை நடைபெறும்.

நிகழ்த்துபவர்:
திரு. த. சிவகுமாரன்.
[அமைப்பாளர்: காரைநகர் கம்பன் கழகம்]

- ஆலய அறங்காவலர்கள்.

[6240]

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

(மருதனார்மடம் கோட்டம்)

## பொதுக் கூட்டம்

இடம்; இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை

காலம்: 09 06 1993 (புதன்) பி. ப. 4 - 00 மணி

1. புதிதாக கடைப்பிடிக்க வேண்டிய பல விடயங்கள் தெரிவிக்கப்படவுள்ளன.
2. புதிய செயலாளர் தெரிவு இடம்பெறும்.
3. கோப்பாய், புத்தூர் பகுதிகளுக்கான நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு இடம் பெறும்.

அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளவும்

- செயலாளர்.

(26014)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
த. பரமநாதன்
(கணித ஆசிரியர்
பன்குளம்)

தோற்றம்:
28 — 11 — 1954

மறைவு:
27 — 05 — 1986

திதி: 08 — 06 — 1993

எமது குடும்பத்தின் ஒளி விளக்கே!

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புத்தாய்,
சகோதர,
சகோதரி,
அண்ணிமார்.
மானிப்பாய்

(26019)

உடுவில் மகளிர் கல்லூரி

## பட்டப்படிப்புகள் பிரிவு

G. A. Q — 94

யாழ்/பேராதனை பல்கலைக் கழக விரிவுரைகள்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — திரு. S வரதராஜன் | B A Hons) |
| தமிழ் | — திரு. கணேசலிங்கம் | B A (Hons) |
| அரசியல் | — திரு. செல்வரட்ணம் | B. A Hons) |

(சி/5224) — நிர்வாகி —

பாரதி இளைஞர் அறிவியற் கழகத்தின்

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | இல 5033 | 4 ஆம் பரிசு | இல. 5939 |
| 2 ஆம் பரிசு | இல. 4359 | 5 ஆம் பரிசு | இல. 4538 |
| 3 ஆம் பரிசு | இல. 4712 | | |

ஆறுதல் பரிசுகள் இல. 4578
இல. 5423
இல. 4529

அதிர்ஷ்டசாலிகள் 23 - 06 - 1993 க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

BEYO League
"அறிவியலில் ஐக்கியம் சகோதரத்துவம்"
31/1A, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (26024)

## கண்ணீர் அஞ்சலி

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர்
திரு. இ. கருணாகரன் அவர்களின் பாரியார்

## திருமதி பவானி கருணாகரனின்

மறைவு குறித்து எமது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்

அமரரின் ஆத்ம சாந்திக்காக அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.

(5947)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். போதனா வைத்தியசாலை:

## ஜெனறேற்றர்களை உடன் அனுப்பக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். போதன வைத்திய சாலைக்கென சுகாதார மக விர் விவகார அமைச்சினால் வழங்கப்பட்ட 200 கே. வி. பவர் கொண்ட இரண்டு ஜெனரேற்றர்களையும் ''குமண'' கப்பலில் இங்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறு யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் சுகாதார மகளிர் விவகார அமைச்சுக்கு மீண்டும் அவசர செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

தற்பொழுது ஒரு ஜெனரேற்றர் மூலமே ஆஸ்பத்திரியின் அவசர சிகிச்சை பிரிவுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதனைவிட மற்றைய 85 கே. வி. ஜெனறேற்றர் முற்றாக பழுதடைந்து விட்டன.

இதற்கான உதிரிப்பாகங்களையும் ''குமண'' கப்பலில் அனுப்பி வைக்குமாறு அச் செய்தியில் மேலும் கேட்கப்பட்டுள்ளது. (இ-17)

## வலுக் குறைந்தோர் புனர்வாழ்வுக்கு அரச சார்பற்ற அமைப்புகள் உதவும்

யாழ்ப்பாணம், ஜூன் 8

வலுக் குறைந்தோரின் புனர்வாழ்வுக்காக யாழ் மாவட்டத்திலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள் சில திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் அண்மையில் நடைபெற்ற வலுக்குறைந்தோரின் புனர்வாழ்வுக்கான வழிமுறைகளை இனங் காண்பது தொடர்பான ஆய்வுப் பட்டறையின் இறுதியில் இதுபற்றித் தெரிவிக்கப்பட்டது.

அறவழிப் போராட்டக்குழு தான் நடத்திவரும் வலுவிழந்தோர் எழுச்சி தொழிலகத்தை எதிர்காலத்தில் மேம்படுத்துவதற்கும் விழிப்புலனற்றோருக்கு வெள்ளைப் பிரம்புகள் வழங்கவும், தையல் பயிற்சி, பன்ன வேலைப் பயிற்சி வழங்கவும் இவர்களுக்கான சுயதொழில் வாய்ப்புக்கான நிதி உதவிகளை வழங்கவும் முன்வந்துள்ளது.

யாழ். வை எம். சீ. ஏ. நிறுவனத்தினர் செவிப்புலனற்றோருக்கு ஓர் ஆரம்ப பாடசாலையை ஆரம்பிக்கவுள்ளனர்.

ஐக்கிய ராச்சியத்தின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினர் புனர்வாழ்வு மற்றும் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளனர்.

றெட்பானா நிறுவனம் காலிழந்த 40 பேருக்கு செயற்கை கால்களைப் பொருத்துவதற்கான நிதி உதவியை ஜெயப்பூர் ஸ்தாபனத்திற்கு வழங்கவுள்ளது

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் வலுவற்றவர்களுக்கு உடற் பயிற்சி வழங்கும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய பொழுது போக்கு பாசறைகளையும் நடத்தும்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சுயதொழில் வாய்ப்புகளை மேற்கொள்ளக் கூடிய வலுக்குறைந்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட 75 பேருக்கு 10 ஆயிரம் ரூபா வரை கடன் வழங்கவுள்ளது.

இவர்கள் தொழில் முயற்சியில் ஈடுபடும்போது 4 மாதங்கள் வரை நிவாரணப் பொருள்கள் வழங்கப்படும். இவர்களுக்கென அமைக்கப்பட்ட நிரந்தர நிறுவனங்களின் செயற்பாட்டு வலுவை அதிகரிக்க ரூபா 5 லட்சம் வரை செலவிடப்படும்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் மாணவர்களுடைய கல்வி வசதிகளை வளர்த்தல் இவர்களின் குடும்பங்களிற்கு வேண்டிய பொருளாதார நிவாரணத்தினை வழங்குதல் போன்ற திட்டங்களை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தும்.

(த-162)


யாழ். குடாநாட்டின், மென்பானப் பிரியர்களின்
மனதில் நீங்காத இடம் பெற்றவை

**புத்தூக்கி - REFRESHER**
(காற்றுட்டப்பட்டது)

**மென்பானங்கள் பலவகைகள்**
அத்தனையும் தரமானவை! சுவையானவை!

★ ஒறேஞ்பார்லி ★ நெக்ரோ ★ லெமனட்
★ இஞ்சிசோடா ★ கோப்கோலா ★ கிறீம் சோடா
★ ஒறேஞ் ஸ்பெசல் ★ லெமனட் ஸ்பெசல்

இவை மட்டுமா? இன்னும்
பல்வேறு தயாரிப்புக்கள்! உங்கள் மனம் குளிர
யாழ். பகுதி தெ. ப. பொ. கூ. ச. கொத்தணி
வழங்கும்

**சொக்கா - CHOCA சொக்லட்**

★ கூல்மன்ஸ் - Coolmans
(உடன் பழச்சாறு)
★ ஸ்ரோபெறி ஜாம்
★ பைன் அப்பிள் ஜாம்
★ ஜப்பிக்ஸ் கம் - Jaf - Fix Gum
(பிசின்)

இன்னும் பல்வேறு தயாரிப்புக்கள் வெளிவரவுள்ளன

வாங்கிடுவீர்!
தரம் அறிந்திடுவீர்!

● புத்தூக்கி மென்பானங்கள் தவிர்ந்த இதர எமது தயாரிப்புக்களை விநியோகம் செய்ய பின்வரும் பகுதிகளுக்கு மட்டும் விநியோகஸ்தர் தேவை. பதிவு செய்யவும்:

தென்மராட்சி பகுதி
கரைச்சிப் பகுதி
வன்னிப் பகுதி

முக்கிய குறிப்பு:
400 மி. லீற்றர் வெற்று யானைச்சோடாப் போத்தல்கள் பெட்டியுடன் சேர்த்தும், அதன் பெட்டிகள் தனியாகவும் அத்துடன் 300 மி. லீற்றர் பான்ரா, கொக்காகோலா, பெப்சி அதேவித வெற்றுப் போத்தல்கள் பெட்டியுடனும், அதன் பெட்டிகள் தனியாகவும் கொள்வனவு செய்யப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்:

**க. ஜெயபாலன்,**
பொது முகாமையாளர்,
யாழ். பகுதி தெங்கு ப. பொ. கூ. ச. கொத்தணி,
370, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

[விளம்பர அமைப்பு:- V. K. J.] (26063)


உ
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் துணை

## பட்டம் அளித்து கௌரவித்தல்

கோண்டாவில் மேற்கு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவத்தின் போது, பக்தி பூர்வமாகவும், வேதாகமக் கிரியா முறைப்படியும் திறம்பெறக் கிரியைகளை நடத்திவைத்த

பிரம்மஸ்ரீ
**ச. ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள் ஐயா**
அவர்களை மேற்படி தேவஸ்தானம் பாராட்டி கௌரவித்து

''சிவாகமக் கிரியாஞான வித்தகர்''
எனும் கௌரவ விருதை வழங்கியது.

திருவோங்கும் தலம்விளங்கும் கோண்டா விலூர்
திகழுபுவ னேஸ்வரியம் பாளின் கோயில்
பெருவிழாவாம் மஹோத்ஸவத்தை ஆதி பாவ
பொலியுசிவா கமக்கிரியை முறையாய்ச் செய்தே
தருஞானத் தெறிவழுவா வேத மந்த்ரத்
தாயவளுக் கபிஷேக ஆராதனை
குருவழியாய்ச் செய்தார்ஸ்ரீஸ் கந்த ராஜக்
குருக்கள் ஐயா நீடூழி வாழி! வாழி!!

இவ்வண்ணம்.
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
கோண்டாவில்.
06 - 06 - 93 (6239)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

| மலர்வு: | | உதிர்வு: |
|---|---|---|
| 06 |  | 09 |
| 01 | | 05 |
| 1928 | | 1993 |

**திருமதி அற்புதம் மார்க்கண்டு**

அன்பில் உருவான பாசத்தின் உறைவிடமே
நீங்கள் இவ்வுலகை நீத்து ஓர் திங்கள் ஆகுதம்மா!
குடும்பத்தில் மூத்தவரே உற்ற துணையானவரே!
திடீர் என எம்மை விட்டுப் பிரிந்தீரே!

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கும்;

பிள்ளைகள், சகோதரிமார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனர், உறவினர்கள்.

V. H. லேன்,
இருபாலை,
கோப்பாய். (26066)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பூச்சி அகற்றப்பட்ட 45 நாட்கள் வயதுடைய கறுப்பு நிற அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: P. நேசன், இல. 408/14, பிரதான வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (26016)

நல்ல நிலையில் உள்ள தையல் மெஷின் சிங்கர் (Zig zag) சாதாரண மெஷினுக்கு மாற்றியும் கொடுக்கப்படும். தொடர்புகொள்க: இல. 117, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (26021)

## வெளிவந்துவிட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீள் பார்வையுடன் கூடிய சைவ நெறி ஆண்டு 8. ஆக்கம்: க. சந்திரசேகரம், கைதடி முத்துக்குமார சுவாமி ம. வி. வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். ஏகவிநியோகஸ்தர்கள் சோதி புத்தகசாலை, மீன் சந்தை முன்பாக பஸ் நிலையம், சாவகச்சேரி. (சி-5222)

## இலவச திருமண சேவை

26 வயது, சித்திரை, செவ்வாயற்ற U.K. Electronic Engineerக்கு படித்த, அழகான, 5 அடி 2 அங்குலத்திற்குக் குறைவான மணப்பெண் தேவை. பெண்ணை அழைக்க ஆவன செய்யலாம். விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி. (26013)

## தேவை

இரண்டு வயது குழந்தையை பராமரிக்கவும், வீட்டு வேலைகளில் உதவி செய்யவும் 15 வயதிற்கும் 20 வயதிற்கும் இடைப்பட்ட பெண் தேவை. இல. 28, டச்சு வீதி, கோப்பாய் தெற்கு. (26018)

## HISTORY 6, 7

வரலாறும், சமூகக்கல்வியும் ஆண்டு 6 'இலகு செயல்நூல்' ஆண்டு 7 'செயல்நூல்' 500 வினா - விடைகள் கொண்டமைந்தவை. விற்பனையாகின்றன. ஆக்கம்: N. Mylvaganam, St. John's College, Jaffna. (25997)

## விற்பனையாகிறது

செபமாலைத் தியானம்-செபப்புத்தகம், களி கூர்ந்த காரணிக்கம், வியாகுல காரணிக்கம், மோட்சானந்த காரணிக்கம் 15 காரணிக்கங்களுடன் செபப்புத்தகம். ''ஆவே மரியா'' புனித சித்தசத்திரை மாதா இல்லம் இல. 92, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (26017)

## வகுப்புகள்

City and Guilds of London Institute, 627 Quantity Surveying - Part - I வகுப்புக்கள் 07-06-93 இல் ஆரம்பமாகி திங்கள் புதன் கிழமைகளில் காலை 6-30 — 8-30க்கு நடைபெறும். து. விசாகபதி, பாடசாலை ஒழுங்கை, தாவடி. [25942]

# ACCOUNTANCY CLASSES

| | |
|---|---|
| C. I. M. A. | Stage-I |
| A. A. T. | Inter |
| & | |
| I. A. B. | Found |
| | Inter |

புதிய வகுப்புக்கள்


**ஆரம்பம்: 11 - 06 - 1993**

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, St. Peter's Lane, Jaffna.

(சி-4800)

# நீங்காத ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 24 | 18 |
| — | — |
| 10 | 05 |
| — | — |
| 1902 | 1992 |

## அமரர் நல்லம்மா சண்முகம்

ஆண்டொன்று சென்றாலும் அன்னையே!
மீண்டும் எம் இதயத்தில் வாழ்ந்து
எம்மை வழிகாட்டி வாழ்விப்பீர்களென
நம்பியே வாழ்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவு அகலாத;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

62/2, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (25999)

# உ
சிவமயம்

# ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருடம் வைகாசி மாதம் 28ஆம் நாள் வியாழக்கிழமை (10-06-93) சஷ்டி திதி, அவிட்டம் நட்சத்திரம், சிங்க லக்னம் சித்தம் கூடிய சுப தினத்தில் காலை 10-33 தொடக்கம் 11-45 வரை வரும் சுபமுகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எமது புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**கருணாகரன்**<br>அவர்களுக்கும் | எமது புத்திரி<br>திருநிறை செல்வி<br>**சாந்தினி**<br>அவர்களுக்கும் |

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரர் பிள்ளையார் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறும், அதன் பின் நடைபெறும் மதிய போசன விருந்தில் பங்குபற்றுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.


★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி செ. அமிர்தலிங்கம்,
''பிரியம்'',
கந்தையா உபாத்தியாயர் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.

திரு. திருமதி மு. மாணிக்கம்,
மாமல்லபுரம்,
உடுவில் வீதி,
சுன்னாகம்

(5943)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| இறப்பு: | திதி: |
|---|---|
| 01 | 07 |
| — | — |
| 06 | 06 |
| — | — |
| 1991 | 1993 |


## திருமதி செல்லம்மா கனகரத்தினம்


உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

13 8 நாயன்மார் வீதி,
நல்லூர். (26015)

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**கு. சிவானந்தகுரு**
பிறப்பு: 08 — 02 — 1944

**மு. சற்குணநாதன்**
பிறப்பு: 23 — 07 — 1958

அழிப்பு: 08 - 06 - 1987

ஆண்டுகள் ஆறு ஓடிவிட்டன. ஆனால் நித்தமும் உங்கள் நினைவில் ஆறாகப் பெருக்கெடுத்தோடும் கண்ணீர் வற்றவில்லையே! சிறீலங்கா இராணுவத்தின் மிருக வெறிக்குப் பலியான பாசமுள்ள மைத்துனன் சற்குணத்தின் பூவுடலை மீட்டுவரப் புறப்பட்ட சிவானந்தகுருவின் பொன்னுடலுக்கு என்ன நடந்தது? ஏது நடந்தது எதுவுமே புரியாமல் காலம் கடக்கின்றது. கண்ணீரால் கரைகின்றோம். மீண்டும் காலன் எங்களுடன் விளையாடுகின்றான். 90இல் எம் தலைவன் முருகுப்பிள்ளை எம்மை விட்டுப்பிரிய......... இது விதியா? இல்லை சதியா? என எண்ணும் வேளையில் 93 முற்பகுதியில் ஆலமரம் போல் தளைத்து வேரூன்றி நின்ற அன்புத் தாயாம் அன்னம்மா மூளைக்காய்ச்சல் நோயினால் அடியோடு சாய்ந்தாவே! இன்று நாம் திக்குத்தெரியாத பாதையில் திசைமாறிய படகுகளாக நிர்க்கதிக்குள்ளாகி விட்டோம். நீங்கள் மீண்டும் வர வேண்டும். நாங்கள் உங்களைக் காணவேண்டும். உங்கள் பிரிவால் துயருற்று உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

— குடும்பத்தினர்.

அம்மன் கோவிலடி,
[illegible]
[illegible] அம்மன்கோவிலடி சூராவத்தை,
சுன்னாகம்.

ஏழாலை வடக்கு.

(5946)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தவறுகளை மீள்விக்காதீர்!

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்றால் வடக்கு – கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைத்தே ஆக வேண்டும். அந்த ஒருங்கிணைந்த மாகாணத்தில் தமிழர்களுக்கு அதிக பட்ச சுயாட்சி உரிமை கிடைக்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் மீண்டும் முயற்சி மேற்கொள்வதால் பயன் எதுவும் விளையப்போவதில்லை. விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் ஒருவரை மற்றவர் குற்றஞ் சாட்டுவதை நிறுத்தி, பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண வேண்டும்.

அமைச்சர் தொண்டமான் தமது முந்திய கருத்தை மீண்டும் இவ்வாறு வலியுறுத்தி இருக்கிறார்.

வடக்கு – கிழக்கு தமிழர்களின் தாயகம். அங்கு அவர்கள் தம்மைத் தாமே ஆள்வதற்கு சுயவலுவுள்ள அரசை அமைக்க உரிமையுடையவர்கள். இவை இரண்டும் தமிழர் பிரச்சினைத் தீர்வுக்குரிய அடித்தளங்கள். அந்த அடித்தளத்திலிருந்தே எந்தத் தீர்வுத் திட்டத்தையும் கட்டி எழுப்ப முடியும்; கட்டி எழுப்ப வேண்டும்.

அது போலவே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதற்கு, தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து முன்னேறியுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச வேண்டியதும் அடிப்படைத் தேவையாகிறது.

சமாதான வழிநடக்க வேண்டுமானால், அந்த இலக்கை அடைய வேண்டுமானால், தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் இந்த இரண்டு அடிப்படைத் தேவைகளும், கொழும்பு அரசினால் உரியவாறு இனங்காணப்பட வேண்டும். அங்கீகரிக்கப்பட வேண்டும்.

தமிழர்கள் தமது தாயகத்தை ஒரு சேர வைத்திருக்க விரும்புகிறார்கள். தமக்கென சுயவலுவுள்ள ஓர் ஆட்சியை அமைக்க விரும்புகிறார்கள். தமது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று ஆவல் கொண்டுள்ளார்கள். தமக்கும தமது எதிர்காலச் சந்ததியினருக்கும் வளமான வாழ்வை கட்டிக்கொள்ள ஆசைப்படுகிறார்கள். தமது இனத்தின் தனித்தன்மைகளைப் பேணி வளர்க்க விழைகிறார்கள்.

இவற்றில் எதுவுமே அளவுக்கு மிஞ்சிய ஆசை ஆகாது. நியாயமான ஆசைகள் என்பது மட்டுமல்ல அவர்களைச் சேர வேண்டிய அடிப்படை உரிமைகளுமாகும்.

கொழும்பு அரசும், தென்னிலங்கைச் சிங்களத் தலைவர்களும் இவற்றை நியாய சிந்தையோடு உணர்ந்தால் அன்றி சமாதானத்தை நினைத்துப் பார்க்கவும் முடியாது. ஏற்கனவே தோல்வி கண்ட தெரிவுக்குழு, அமைதிப்படை என்பன பிரச்சினையை மேலும் ஆழமாக்கி அமைதியின்மையைப் பெருக்குமே அன்றி நிலைமை சீரடைவதற்கு எந்த வகையிலும் உதவாது. மீண்டும் மீண்டும் தவறுகளைச் செய்வதால் விளைவது பாதகமே!

தமிழர்களை அடக்குமுறைக்கு ஆளாக்குவதற்கு எடுக்கப்படும் எந்தச் செயலாலும் அவர்களது விடுதலை வேட்கையை வெல்ல முடியாது. உலக வரலாறுகள் தந்த உதாரணங்களைப் புறந்தள்ளிவிட்டு சமாதானத்தை நிதர்சனம் காண முயலலாமா? அது கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கும் வீண்முயற்சியாகவே முடியும்!

### நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் தொழில்நுட்பவியலாளர் சங்கத்தின் ''நுணுக்கம்'' சஞ்சிகை வெளியீட்டுவிழா நாளை புதன்கிழமை மாலை 4.15 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கத்தில் நடைபெறும்.

சங்கத்தலைவர் திரு. க. குமாரதாசன் விழாவுக்குத் தலைமை வகிப்பார். (இ)

### ஆலயங்களில்

மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவிருக்கிறது. (உ-87)

0 o o

தென்புலோலி காந்தியூர் வற்றாப்பளை அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா இன்று காலை 10 30 மணிக்கு நடைபெறும். (உ-87)

o o o

நல்லூர் மூத்த விநாயகர் கோவில் சப்ததச குண்ட மகா கும்பாபிஷேகம் நாளை காலை 10.15 மணிக்கு ஆரம்பமாகும். (உ-111)

o o o

யாழ்.பல்கலைக்கழக அருள்மிகு பார்வதி அம்பாள் சமேத ஸ்ரீபரமேஸ்வரன் ஆலய மகா கும்பாபிஷேக தினவிழா நாளை காலை 7மணி முதல் நடைபெறவிருக்கிறது. (உ-3)

### பாடசாலைகளில்

சுன்னாகம் கொத்தணிப்பாடசாலைகளின் தமிழ் மொழித்தினவிழா இன்று செவ்வாய்க்கிழமை கந்தரோடை ஸ்கந்தாவரோதயக் கல்லூரியில் கொத்தணி அதிபர் திரு.ப விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும். (இ-162-152)

o o o

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் ''சுவாமி விவேகானந்தரின் கல்விச்சிந்தனைகள்'' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறது.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணசாரதா சேவாக்கிரமத்தின் பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா கருத்துரை வழங்குவார். (இ-87)

### பரிசளிப்பு விழா

யாழ். இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் திரு. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும்.

யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசுகளை வழங்குவார். (ஓ-152)

### 17 ஆம் திகதி பரீட்சை

ஆயுள்வேதத் திணைக்களத்தினால் நடத்தப்படும் டி. ஏ. எம். பரீட்சை அடுத்த மாதம் (ஜூலை)17 ஆம் திகதி கொழும்பில் நடைபெற உள்ளது.

லங்கா ஆயுள்வேத மருத்துவக் கல்லூரிப் பதிவாளர் இத்தகவலை கொழும்பிலிருந்து கல்லூரி அதிபருக்குத் தெரியப்படுத்தி உள்ளார். (அ)

### வினாத்தாள்கள் வந்து சேர்ந்தன

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி இறுதிப்பரீட்சைக்கான வினாத்தாள்களும்—

''பலோ/மீ'' பரீட்சைக்கான வினாத்தாள்களும்—

விமானம் மூலம் பலாலிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு இ சுந்தரலிங்கத்துக்கு நேற்று மாலை அறிவித்துள்ளார்.

இந்த வினாத்தாள்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் பலாலியில் இருந்து எடுத்து வந்து ஒப்படைப்பார்கள் என்றும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (உ-3)

# யாழ்.மாவட்ட தபாலகங்களில் சிற்றூழியருக்கு தட்டுப்பாடு

## 80 வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ் மாவட்டத்தில் உள்ள தபாலகங்களில் 80 சிற்றூழியர்களின் வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படாது இருப்பதாக வடமாகாண அஞ்சல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனால் தபாலகங்களில் சிற்றூழியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம், யாழ். மாவட்ட தபாலகங்களில் தற்போது பணிபுரியும் சிற்றூழியர்களில் 80 பேர்வரை தற்காலிக நியமனங்களுடன் கடமையாற்றி வருகின்றனர்.

இவர்களை நிரந்தரமாக்குவதற்கு வடமாகாண அஞ்சல் திணைக்களம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. (இ-17)

# இனப்பிரச்சினை அறிக்கை; பாரிஸ் கூட்டத்தில்

## அமெ. காங். கமிட்டி சமர்ப்பிக்கும்

வாஷிங்டன், ஜூன் 8

அமெரிக்கநாடாளுமன்றத்தில் உள்ள தெற்காசிய விவகாரங்கள் தொடர்பான விஷயங்களுக்குப் பொறுப்பான காங்கிரஸ் கமிட்டி இலங்கை இனப்பிரச்சினை பற்றி அறிக்கை ஒன்றைத் தயாரித்து உள்ளது.

இம்மாதம் 18 ஆம் திகதி பிரெஞ்சுத் தலைநகர் பாரிஸில் நடைபெற இருக்கும் இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்தில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### தென் ஆபிரிக்காவில் அடுத்த ஆண்டு தேர்தல்

கேப்டவுன், ஜூன் 8

தென் ஆபிரிக்காவில் இனரீதியற்ற பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தும் திகதியை, அரசியல் சீர்திருத்தப் பேச்சுகளை நடத்தும் குழு சிபார்சு செய்துள்ளது.

இதன்படி அடுத்த ஆண்டு ஏப்ரல் 27 ஆம் திகதி இத்தேர்தல் நடைபெறும். [அ-எ]

### கருவாடு விநியோகம்

மந்திகை, ஜூன் 08

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது கிளைகள்மூலம் மாசிக் கருவாட்டை பாவனையாளருக்கு விநியோகித்து வருகிறது.

ஒரு கிலோ மாசிக்கருவாடு ரூபா 200 வீதம் தேவையான அளவுகளில் பாவனையாளருக்கு வழங்கப்பட்டு வருகிறது. (த-87)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ் மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை 4 மணிக்கு புத்தூர் வீனஸ் மைதானத்தில் நடைபெறும். இறுதியாட்டத்தில் யாழ். பிரதேச செயலர் பிரிவு அணியை எதிர்த்து தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவு அணி மோதும். இறுதியாட்டத்தின் போது பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் திரு. க. கனகரத்தினம் கலந்து கொள்வார்.

o o o

''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். பல்கலைக்கழகம் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3. 45 மணி:- ஜொனியன்ஸ் அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி

★ மாலை 4. 45 மணி:- யாழ் பல்கலைக்கழக கூட்டு அணி எதிர் சென்றலைட்ஸ் நீல அணி

o o o

பொலிகண்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டியும், கலைவிழாவும் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவிருக்கின்றன. விளையாட்டுப் போட்டியில் பாரம்பரிய விளையாட்டுகளான கம்படி, சிலம்படி போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவுள்ளது.

o o o

யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:

★ பிற்பகல் 3.30 மணி:- உரும்பராய் உதய சூரியன் அணி எதிர் புன்னாலைக்கட்டுவன் கலைவாணி அணி

★ மாலை 4.30 மணிக்கு:- மயிலங்காடு ஞானகலா அணி எதிர் புங்குடுதீவு அம்பாள் அணி. (உ-155

### பாடசாலை மாணவர்களின்

# மாவட்ட மெய்வல்லுநர் போட்டி இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். கல்வித் திணைக்களத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடத்தப்படும் மெய்வல்லுநர் போட்டிகள் இன்று காலை 8 30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்

இன்று காலையும், பிற்பகலும் நாளை பிற்பகல் 1. 30 மணி முதலும் இந்தப் போட்டிகள் நடைபெறும். வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் பொறுப்பாளர் திரு. ந. இன்பன் சிறப்பு விருந்தினராகப் பங்குபற்றுவார். பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை தியாகராஜா நிகழ்வுக்குத் தலைமை வகிப்பார். திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்குவார்.

இப்போட்டியில் கோட்ட மட்டத்தில் தனிநபர் நிகழ்ச்சிகளில் முதல் இரு இடங்களைப் பெற்ற வீரர்களும், அஞ்சல் ஓட்டத்தில் முதல்இரு இடங்களைப் பெற்ற அணிகளின் வீரர்களும் பங்குபற்றுகின்றனர்.

அதிக புள்ளிகளைப் பெறும் கோட்டத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மத்தியகுழு உறுப்பினர் லெப்டினன்ட் கேணல் பொன்னம்மான் நினைவு சுற்று வெற்றிக் கேடயமும் —

இரண்டாம் இடம் பெற்ற கோட்டத்திற்கு சுற்று வெற்றிக் கிண்ணமும் —

ஒவ்வொரு பிரிவு முதன்மை வீரர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும் தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பால் அன்பளிப்பாக வழங்கப்படவிருக்கின்றன. (உ)

# யாழ். ஆஸ்பத்திரியில் பாதுகாப்பு தீவிரம்

யாழ். போதனா வைத்திய சாலையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

போதனா வைத்திய சாலையின் பிரதான வாசலை வைத்திய சாலை உத்தியோகத்தர்கள் மட்டும் பயன்படுத்த வேண்டும் என்பதில் தற்போது கடுமையான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

அதே சமயம் பிரேத அறைப் பக்கம் -- வைத்திய சாலையின் விக்ரோறியா வீதியில் உள்ள — பின்பக்க வாசலிலும் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

சமையலுக்குரிய பொருள்கள் கொண்டு செல்பவர்கள், கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்துபவர்கள், பிரேதங்களைக் கொண்டு செல்பவர்கள் மட்டுமே பின்பக்க வாசலைப் பயன்படுத்த வேண்டும் என்றும் ஏனையோர் இதனைப் பயன்படுத்த அனுமதிக்கலாகாது என்றும் ஆஸ்பத்திரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வைத்திய சாலையின் வைத்திய சாலைக்குள் விடப்பட்ட டாக்டர் ஒருவரின் மோட்டார் சைக்கிளில் இருந்து உதிரிப்பாகங்கள் திருடப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தை அடுத்தே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் என்றும் கூறப்படுகிறது. (இ-15)

### வடமராட்சி கிழக்கில்

# இடம் பெயர்ந்தோருக்கு சிறு பூச்சிகளின் தொல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 8

வடமராட்சியில் மருதங்கேணி, நாகர்கோவில் பகுதியில் அமைந்துள்ள இடம் பெயர்ந்தோர் குடியிருப்புப் பகுதியில் ஒருவித சிறிய ரக பூச்சியின் தொல்லையால் அங்குள்ள மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெண்மை நிறமான சிறு பூச்சிகள் பெரும் எண்ணிக்கையில் மணல் நிலத்தில் இருந்து கிளம்பி வருவதாகவும்—

இதனால் சுமார் ஆயிரம் குடிசைகளில் வசிக்கும் மக்களுக்கு பெரும் தொல்லை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். அரச அதிபருடனான தமது மாதாந்த சந்திப்பின்போது யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் யாழ். அரச அதிபரின் கவனத்துக்கு மேற்படி விடயத்தை கொண்டுவந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளை நரம்பியல் விபத்துப் பாதிப்பு; உடற்பயிற்சி சிகிச்சை வசதி இல்லை

## கருத்தரங்கில் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

மூளை நரம்பியல் விபத்துக்களினால் பாதிக்கப்பட்டுவரும் நோயாளர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிப்பதற்கான உடற்பயிற்சி வசதிகள் யாழ். போதனா வைத்திய சாலையில் குறைந்து வருகிறது. இதனால் இந்நோயினால் பாதிக்கப்படுபவர்களுக்கு ஏற்ற சிகிச்சை அளிக்கமுடியாது. இந்நோயாளர்களின் நிலை கவலைக்கிடமானதாக மாறிவருகிறது.

—இவ்வாறு தெரிவித்தார் யாழ் போதனா வைத்திய சாலை வைத்திய நிபுணர் திருமதி. எஸ். நாகேந்திரா.

வடஇலங்கை வைத்திய கலாநிதிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் வண்ணை மேற்கு தனியார் மருத்துவமனையில் இடம்பெற்ற மாதாந்த சுகாதாரக் கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:—

எமது பிரதேசத்திலிருந்து இளம் சந்ததியினர் அதிகளவில் வெளியேறி வருவதால் இந்நோயினால் பாதிக்கப்படும் வயது முதிர்ந்தவர்களை பராமரிப்பது மிகவும் சிரமமாக இருக்கின்றது. பாதிக்கப்பட்டு ஊனமுற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும், ஏற்ற ஓரிடத்தில் வைத்து அவர்களுக்கு உரிய உடற்பயிற்சி போன்ற வசதிகள் அளிப்பதற்கும் பொதுநலனில் அக்கறையுள்ள தொண்டர் நிறுவனங்கள், கொடைவள்ளல்கள், வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்கள் முன் வந்து உதவ வேண்டும்.

வெளிநாடுகளில் இந்நோயினால் பாதிக்கப்படுபவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு அதிக அக்கறை காட்டப்படுகிறது. ஆனால் எமது நாட்டின் இந்நிலை இல்லை.

வருடம் ஒன்றுக்கு ஆயிரம் பொதுமக்களில் இருவர் என்ற வீதத்தில் மூளை நரம்பியல் விபத்து நோயினால் பொது மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். பாதிக்கப்படுபவர்களில் இருபது வீதமானோர் இருபத்துநான்கு மணிநேரத்தில் குணமடைந்து விடுகின்றனர். அறுபது வீதமானோர் குணமடையக்கூடிய நிலையிலும் இருக்கின்றார்கள் எஞ்சிய இருபது வீதத்தினரும் மரணத்தை எதிர்நோக்குகின்றனர்.

இந்நோய் வராமல் காப்பதற்கு கொழுப்புச் சத்து அதிகமுள்ள உணவுகளையும், புகைத்தல் மற்றும் போதைவஸ்து பழக்கங்களையும் தவிர்த்தல் நல்லது—என்றார்.

கோயில்கள் மற்றும் விடயங்களுக்கு அதிகமாகச் செலவிடப்படும் பணத்தை இத்தகைய நோய்களினால் பாதிக்கப்பட்டு அங்கவீனமானோருக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு பயன்படுத்துவதில் அக்கறை காட்ட வேண்டும் என்று இக்கருத்தரங்கில் பங்கேற்ற வைத்தியர்கள் பலரும் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

(உ-162)

### கைத்தொழில் பயிற்சி சபையால்

# மட்டுநகரில் இளைஞர்களுக்கு பஸ் ஓட்டுநர் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 8

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி சபை, இலங்கை போக்குவரத்து சபையுடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு பஸ் ஓட்டுநர் பயிற்சியை வழங்கிவருகிறது.

முதற்கட்டமாக 50 இளைஞர்களுக்கு இந்தப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆங்கில சுருக்கெழுத்து, பனம்பொருள் கைப்பணி என்பவற்றிலும் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

உலக நண்பர்கள் கழகத்துடன் (World of Friends) இணைந்து 30 இளைஞர் யுவதிகளுக்கு ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சியினையும்—

பனை அபிவிருத்தி சபையுடன் இணைந்து 200 பனை கைவினைஞர்களுக்கும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி சபை பயிற்சியினை வழங்கி வருகிறது.

அவுட்போட் மோட்டார் பயிற்சி நிலையம் ஒன்றையும் மற்றும் கைத்தறி நெசவு, தையல் பயிற்சி நிலையங்களையும் மட்டக்களப்பில் அமைக்க மேற்படி சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

(த-5)

# நடுத்தரக் குடும்பங்களுக்கு விசேட வீடமைப்பு திட்டம்

கொழும்பு, ஜூன் 8

நடுத்தர வருமானமுள்ள குடும்பங்களின் நன்மைக்காக விசேட வீடமைப்புத் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவுள்ளது.

வீடமைப்புக் கூட்டுத்தாபனம், யு எஸ். எயிட் நிறுவனத்தின் உதவியுடன் இத்திட்டத்தை அமுல் செய்யவுள்ளது.

இதற்காக யு எஸ். எயிட் நிறுவனம் 20 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. இத் திட்டத்துக்கு என்று யு எஸ். எயிட் நிறுவனம் 100 கோடி ரூபாவை ஒதுக்க முன்வந்துள்ளது.

(த-எ)

# விடுதலைப் போருக்கு வித்திட்ட சிவகுமாரன் எம்முடன் வாழ்கிறான்

## நினைவுதின நிகழ்ச்சியில் பேச்சு

உரும்பராய், ஜூன் 8

தமிழினம் படிப்படியாக ஏமாற்றப்பட்டு வந்த காலத்தில் எமது இனத்தின் விடுதலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து சுதந்திரத்தை மீட்டெடுப்பதற்காக தன்னை அர்ப்பணித்தவன் சிவகுமாரன் எமது விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்ட அவன் இன்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டே இருக்கின்றான்.

அண்மையில் உரும்பராயில் நடைபெற்ற தியாகி பொன். சிவகுமாரனின் 19 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. இளையவன் இவ்வாறு தெரிவித்தார்.

உரும்பராய் சந்தியில் அமைந்துள்ள பொன். சிவகுமாரன் நினைவாலய முன்றிலில் நடைபெற்ற மேற்படி விழாவில் தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது;

சுதந்திர தாகத்தை ஆயுத பலத்தால் அழித்து விட முடியாது என்பதை சிங்கள அரசுக்கு உணர்த்தியவன் சிவகுமாரன்.

மக்களின் விடுதலைக்காக மீண்டும் இந்த மண்ணில் பிறப்பேன் என்று தியாகி சிவகுமாரன் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் தனது தாயாரிடம் கூறியிருந்தான்.

மரணம் தன்னை அணைக்கப் போகின்றது என்பதை அவன் முன்பே உணர்ந்திருந்தான். என்று தமிழீழத்தில் புலிக்கொடி பறக்கிறதோ — என்று அந்நியர் படையை புறமுதுகிடச் செல்கிறோமோ— அன்று தான் சிவகுமாரனின் தியாகம் பூரணத்துவம் அடையும் — என்றார்.

விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி ரதி உட்பட பலர் நிகழ்ச்சியில் உரையாற்றினர்.

நிறைவாக நடனம் வில்லுப் பாட்டு நாடகம் ஆகியவை இடம்பெற்றன.

(த-11)

# தெற்கில் தொடர்ந்து மழை

கொழும்பு ஜூன் 8

சப்பிரகமுவ, வடமத்திய மற்றும் மேல் மாகாணங்களில் தொடர்ந்து கடும் மழை பெய்துவருகிறது.

களனி கங்கை பெருக்கெடுத்துள்ளதால் தாழ்ந்த பகுதிகளில் வசித்து வந்த மக்கள் பெருமளவில் இடம் பெயர்ந்துள்ளனர். பல பகுதிகளிலும் மண்சரிவு அபாயம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-6)

### தற்கொலைத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அவர்கள் தற்போது விசாரிக்கப்படுவதாகவும் பொலீஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இவர்களை விசாரித்ததில்— கொழும்பில் தாக்குதல் அணிகளைச் செயற்படுத்தும் புலிகளின் திட்டம் குறித்து முக்கிய சில தகவல்களை பொலீஸார் பெற்றிருப்பதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-1)

### சாயிபாபாவைக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத் தடுக்க முயற்சித்த பகவானின் பக்தர்கள் இருவரை இக்கோஷ்டி படுகொலை செய்தது என்றும்—

அதற்கிடையில் பொலீஸார் அங்கு சென்று அந்த நால்வரையும் சுட்டுக் கொன்றனர் என்றும் தெரிவித்தது.

இந்தச் சம்பவம் குறித்து பொலீஸார் தமது விசாரணைகளை நடத்தி வருவதாக அறிவிக்கப்பட்டது

(உ-எ)

# தவறுகளை திருத்தாவிடில் கடுமையான விளைவுகள்

## அ.தி.மு.கவுக்கு எச்சரிக்கை

சென்னை, ஜூன் 8

அ.தி.மு.க. அரசு தனது தவறுகளைத் திருத்திக் கொள்ளா விட்டால் அது கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டி ஏற்படும்.

இந்திரா காங்கிரஸின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. ஜி. கே. மூப்பனார் முன்கண்டவாறு எச்சரித்தார்.

அ.தி.மு.க. அரசின் தவறுகளை சுட்டிக்காட்டுவது இந்திரா காங்கிரஸின் ஜனநாயக் கடமையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழக சிறைகளில் இருந்து விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் எப்படி தப்பிச் செல்கிறார்கள் என்பது தெரியவில்லை என்றும்—

மத்திய அரசின் மீது குற்றஞ்சாட்டுவதை விட்டு மாநிலச் சிறைகளின் பாதுகாப்பை மாநில அரசே பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

(இ-எ)

# யானை கணக்கெடுப்பு இம்மாதத்தில் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 8

இலங்கையில் முதல் முறையாக யானைக் கணக்கெடுப்பு இம்மாத பிற்பகுதியில் வனவிலங்குப் பாதுகாப்புப் பிரிவினால் மேற்கொள்ளப் படவுள்ளது.

1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்ற போது நாட்டின் யானைத் தொகை 15 ஆயிரமாக இருந்தது இப்போது 3 ஆயிரம் வரையான யானைகளே நாட்டில் உள்ளன.

தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது என்றும் பி. பி. ஸி. நேற்று அறிவித்தது.

ஆயிரம் அதிகாரிகள் ஆறு மாதகாலமாக இதில் ஈடுபட உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ)

### சமாதானக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிலும் இருக்கும் ஆன்மீகத் தலைவர்களிடையே தொடர்பு ஒன்றை எவ்வகையிலேனும் ஏற்படுத்துவதே இதன் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆன்மீகத் தலைவர்கள் என்ற முறையில் தங்களிடம் இருந்து என்ன உதவி எதிர்பார்க்கப்படுகிறது என்பதை அறிய அவர்கள் விரும்புகின்றார்கள்.

ஆனால் நடைபெறும் போர் தமிழர் மண்ணையும் மொழியையும் பற்றியது. ஆன்மீகத் தலைவர்களிடையே ஏற்படும் ஒற்றுமை இதனைத் தீர்த்து [illegible] வார்.

(அ-எ)


## புளொக் தயாரிப்பாளர்

புளொக் தயாரிப்பதில் தேர்ச்சியும் அனுபவமும் உள்ளவர்கள் தேவை. சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

முகாமையாளர் (ஆளணி, நிர்வாகம்)
உதயன்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னையா நாகமுத்து

திருமதி சின்னையா நாகமுத்து காலமானார். இவர் காலஞ்சென்ற சீனியர் சின்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அப்பையா, கணபதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும், திருமதி பொன்னையா சின்னம்மா, காலஞ்சென்ற சுப்பையா சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும், திருமதி. திருவிளங்கம் இரத்தினம், திருமதி காலிங்கராசா நேசமலர், காலஞ்சென்ற இராசேஸ்வரி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (ஆசிரியர்), திரு. தேவராசா (ஆசிரியர் யாழ் / கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), திருமதி தர்மலிங்கம் செல்வநாயகி, திருமதி ஆறுமுகதாசன் சகுந்தலா தேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திருவிளங்கம், திருமதி மகேந்திராதேவி (ஆசிரியை யாழ் / சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை), திரு. காலிங்கராசா (ஸ்ரீமுருகன் மில், இணுவில்), திரு. தர்மலிங்கம், திரு. ஆறுமுகதாசன், திருமதி தேவிசத்தியபாமா தேவராசா (ஆசிரியை யாழ். இணுவில் சைவப் பிரகாச மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (8-6-93) அன்னாரது இல்லத்தில் காலை 9.00 மணியளவில் நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு தாவடி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. தேவராசா (ஆசிரியர்)
(மகன்)

இணுவில் தெற்கு,
இணுவில்.

(26028)

## திருமதி நகுலராசா நகுலேஸ்வரி

திருமதி நகுலராசா நகுலேஸ்வரி நேற்றிரவு காலமானார். அன்னார் பருத்தித்துறை ராஜன் எலக்றிக்கல்ஸ் முருகேசு நகுலராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நித்தியானந்தம் தம்பதிகளின் மூத்த புதல்வியும், இலங்கநாதன், கிரிதா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு அவரது குடத்தனை இல்லத்தில் இன்று நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்;
மு. கந்தசாமி
ராஜன் எலக்றிக்கல்ஸ்,
பருத்தித்துறை

அம்பனை,
குடத்தனை.
(26030)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 08-06-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org